# December 15, 2025 – தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. 'தமிழ் மரபு போற்றும் மாமன்னர் பெரும்பிடுகு முத்தரையர்' (சுவரன் மாறன்) என்று குடியரசு துணைத் தலைவர் சி.பி. ராதாகிருஷ்ணன் புகழாரம் சூட்டினார்.
   i. பெரும்பிடுகு முத்தரையர் பண்டைய தமிழ்நாட்டின் மிகப் புகழ்பெற்ற ஆட்சியாளர்களில் ஒருவராக 7-ஆம் நூற்றாண்டு முதல் 9- ஆம் நூற்றாண்டு வரை தமிழகத்தின் மையப்பகுதிகளை ஆண்ட முத்தரையர் வம்சத்தைச் சேர்ந்தவர்.
   ii. திருச்சியைத் தலைமையிடமாகக் கொண்டு சுமார் நாற்பது ஆண்டுகளாக ஆட்சி புரிந்த அவரது நிர்வாக நிலைப்புத்தன்மை, ஆளுகை விரிவாக்கம், கலாசாரப் பாதுகாப்பு மற்றும் போர் வெற்றிகளின் சிறப்பை உலகம் அறியும் வகையில், அவரது நினைவு அஞ்சல்தலை வெளியிடும் நிகழ்ச்சி தில்லியில் குடியரசு துணைத் தலைவர் மாளிகை அரங்கில் நடைபெற்றது.
2. உலகக்கோப்பை ஸ்குவாஷ் போட்டியில் ஹாங்காங் சீனாவை 3-0 என வீழ்த்தி இந்தியா முதன்முறையாக உலக சாம்பியன் பட்டத்தை கைப்பற்றியது.
   i. வேர்ல்ட் ஸ்குவாஷ், எஸ்ஆர் எஃப்ஐ, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் சார்பில் உலகக் கோப்பை ஸ்குவாஷ் போட்டி சென்னை எக்ஸ்பிரஸ் மால் வளாகத்தில் கடந்த 9- ஆம் தேதி தொடங்கியது. இதில் நடப்பு சாம்பியன் எகிப்து, ஈரான், ஆஸ்திரேலியா, பிரேஸில் உள்பட 12 நாடுகளின் அணிகள் பங்கேற்றன.
   ii. இந்நிலையில் இறுதி ஆட்டத்தில் இந்தியா-ஹாங்காங் சீன அணிகள் மோதின. தொடக்க ஆட்டத்தில் மூத்த வீராங்கனை ஜோஷ்னா சின்னப்பா ஹாங்காங்கின் காயி லீயுடன் மோதினார். தரவரிசையில் காயி லீ முன்னிலை வகித்தபோதிலும், ஜோஷ்னாவின் ஆட்டத்துக்கு ஈடு தரமுடிய வில்லை. இறுதியில் ஜோஷ்னா 3-1 என லீயை வீழ்த்தினார்.
   iii. ஆடவர் ஒற்றையரில் அபய் சிங் ஹாங்காங்கின் அலெக்ஸ் லாவுடன் மோதினார். இதில் 19 நிமி ஷங்களில் 3-0 என வென்றார் அபய் சிங்.
   iv. இரண்டாவது மகளிர் ஒற்றை ரில் அனாஹத் சிங்கும்-டோ மடோ ஹோவும் மோதினர். இதில் அனாஹத் 3-0 என வென் றார்.
   v. இந்த வெற்றியின் மூலம் முதன்முறையாக இந்திய அணி உலக சாம்பியன் பட்டத்தை வென்று வரலாறு படைத்தது. ஏற்கெனவே ஆஸ்திரேலியா, பாகிஸ்தான், எகிப்து, இங்கிலாந்து அணிகள் பட்டம் வென்றுள்ளன.
3. எகிப்து மற்றும் ஐரோப்பிய நாடுகளின் வெளியுறவுத் துறை அமைச்சர்களை இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கர் சந்தித்தார்.
   i. ஐக்கிய அமீரகத்தில் அரபு நடைபெற்ற சர் பானி யாஸ் ஃபோரம் 2025 சர்வதேச உச்சிமாநாட்டில் பங்கேற்றபோது அவர் பல்வேறு நாடுகளின் அமைச்சர்களை சந்தித்தார்.
   ii. ஆண்டுதோறும் நடைபெறும் சர் பானி யாஸ் மாநாட்டில் சர்வதேச மற்றும் பிராந்திய விவகாரங்கள் குறித்து விரிவாக விவாதம் நடத்தப்படுகிறது.
4. எரிசக்தி பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதுடன், எரிசக்தித் திறன் சார்ந்த இலக்குகளை முன்னிறுத்தும் நோக்கில், ஒவ்வோர் ஆண்டும் டிச.14-இல் தேசிய எரிசக்திப் பாதுகாப்பு தினம் கடைப்பிடிக்கப்படுகிறது.

5. முதல் ஸ்குவாஷ் உலகக் கோப்பையை வென்ற இந்திய அணிக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் எக்ஸ் தளத்தில் வெளியிட்ட பதிவு:
   i. தனது முதல் ஸ்குவாஷ் உலகக் கோப்பையை வென்றுள்ள இந்திய அணிக்குப் பாராட்டுகள். சொந்த நாட்டுப் பார்வையாளர்களின் முன்னிலையில், ஜோஷ்னா

சின்னப்பா, அபய் சிங், வேலவன் செந்தில்குமார் மற்றும் அனாஹத் சிங் ஆகியோரின் நிதானமும், துணிச்சலும், தரமும் நிறைந்த ஆட்டத்தால் 3-0 என்ற கணக்கில் ஹாங்காங் அணியை வீழ்த்தி வரலாற்று வெற்றியை இந்திய அணி பெற்றுள்ளது.

ii. இந்திய அணியின் நால்வரில் மூவர் தமிழகத்தைச் சேர்ந்த வீரர்கள் என்பதும், இத்தகைய பன்னாட்டுத் தொடரை சென்னையில் நடத்தியதும் சேர்ந்து இந்தச் சாதனை வெற்றியானது.

6. இலங்கைக்கு 25 டன் அத்தியாவசிய மருந்துகள் மற்றும் 14,200 கிலோ உணவுப் பொருள்களை இந்தியா அனுப்பியது.
   i. டித்வா புயலால் கடுமையாகப் பாதிக்கப்பட்ட இலங்கைக்கு ஆபரேஷன் சாகர் பந்து முன்னெடுப்பின் கீழ் பல்வேறு உதவிகளை இந்தியா தொடர்ச்சியாக செய்து வருகிறது.
7. ஹனுக்கா யூதர்களின் புனித பண்டிகை.
8. ரஷியாவுக்கு 300 பொருள்களின் ஏற்றுமதியை அதிகரிப்பதன் மூலம், அதிக வருவாய் ஈட்ட இந்திய ஏற்றுமதியாளர்களுக்கு வாய்ப்பு ஏற்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.
   i. இது குறித்து மத்திய அரசு அதிகாரி ஒருவர் கூறுகையில், 'ரஷியாவில் பொறியியல், மருந்து, வேளாண்மை, ரசாயனம் உள்ளிட்ட துறைகளின் 300 பொருள்களுக்கு அதிக தேவை உள்ளது.
   ii. தற்போது இந்தியாவில் இருந்து ரஷியாவுக்கு ஏற்றுமதி செய்யப்படும் இந்தப் பொருள்களின் மதிப்பு சுமார் ரூ.15,400 கோடி. இதுதவிர ஜவுளி, தோல் பொருள்கள், கைவினைப் பொருள்கள், பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருள்கள் உள்ளிட்டவை அந்நாட்டு சந்தையில் கணிசமான இடத்தைப் பிடிக்க முடியும்' என்று தெரிவித்தார்.